## பாடம் 12 யாக்கோபின் 12 குமாரர்கள் (ஆதி 27 – 31)

இரட்டையராகிய யாக்கோபும் ஏசாவும் வளர வளர அவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளும் பெருகியது. தங்கள் தாயின் கருவிலே ஆரம்பித்த போராட்டம்,அவர்கள் வளர்ந்த பின்பும் தொடர்ந்துக் கொண்டிருந்தது.ஈசாக்கு ஏசாவையும்,ரெபெக்காள் யாக்கோபையும் மிகவும் நேசித்தது வெளிப்படையாக அனைவரும் காணக்கூடியதாய் இருந்தது. அவர்களின் சண்டைகளுக்கு அளவேயில்லை.

ஒரு நாள்,யாக்கோபு தன் தகப்பன் பார்வையற்றவனென்றும் மரணத்திற்கு சமீபித்திருக்கிறார் என்பதையும் நன்கு அறிந்து, அவரை ஏமாற்றினான். தன் தாயின் உதவியுடன் ஈசாக்கினிடத்திலிருந்து முதல் குமாரனாகிய ஏசாவின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான். இந்தப் பாடத்தில் யாக்கோபு எவ்வாறு ஏசாவை ஒரு கிண்ணம் கூழுக்காக ஏமாற்றி சேஷ்ட புத்திரபாகத்தை வாங்கினான் என்பதை நினைவு கூறுங்கள்.

யாக்கோபு தன்னை ஏமாற்றிவிட்டான் என்பதை ஏசா அறிந்தவுடன்,கோபப்பட்டு “என் தந்தை மரித்தவுடன் நான் யாக்கோபை கொன்றுவிட்டு,என்றுமில்லாதபடி அவனை அழித்துவிடுவேன்” என்றான். ரெபெக்காள்,ஏசாவின் பயமுறுத்துதலை கேட்டு யாக்கோபிடம் “நீ இங்கேயிருந்துப் புறப்பட்டு என் சகோதரனின் வீட்டிற்குச் சென்றுவிடு! உன் சகோதரனின் கோபம் தணிந்தவுடன், நான் ஆள் அனுப்பி அவ்விடத்திலிருந்து உன்னை அழைப்பிப்பேன். நான் ஒரே நாளில் உங்கள் இருவரையும் ஏன் இழந்துப் போக வேண்டும்? உடனே சீக்கிரம் புறப்பட்டு போ” என்றாள்.

யாக்கோபு தன் மாமன் லாபானின் வீட்டிற்குச் செல்ல, ஈசாக்கின் அனுமதி வேண்டும். என்பதையும் அவள் அறிந்திருந்தாள். அதனால் இந்த பிரச்சனையை ஈசாக்கும் ஏற்றுக்கொள்ள கூடிய விதத்தில் அணுக தீர்மானித்தாள்.அதன்படி ரெபெக்காள் “ஏத்தின் குமாரத்திகளினிமித்தம் என் உயிர் எனக்கு வெறுப்பாயிருக்கிறது. யாக்கோபுக்கு நம் இனத்தார் மத்தியில் பெண் கொண்டால் நன்றாயிருக்குமே” என்று ஈசாக்கிடம் கூறினாள்.

ஈசாக்கு இந்த விஷயத்தில் வேறு ஒன்றும் அதிகமாய் யோசிக்காமல் யாக்கோபை உடனே அழைத்து, "நான் சொல்வதை கவனமாக கேள்! நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண் கொள்ளாமல், உன் தாயின் இனத்தாரிடம் போய் அங்கே ஒரு பெண் கொள். உன் தாத்தாவாகிய ஆபிரகாம் தேவனையும் அவர் அவருக்கு கொடுத்த ஆசீர்வாதங்களையும்,வாக்குத்தத்தங்களையும் மறவாதே!" என்று கட்டளையிட்டான்.

எனவே ரெபெக்காள் கொஞ்சம் உணவை தயார் செய்து கொடுத்து அவனை முத்தமிட்டு வழியனுப்பி வைத்தாள். அதற்கு பிறகு தன் செல்லக் குமாரனை அவள் திரும்பக் காணமாட்டாள் என்பதை உணராமல் அவனை தூர தேசத்திற்கு புறப்பட்டு போகப் பண்ணினாள். பயணத்தின் போது ஒரு மாலையில் இராத்தங்க ஒரு இடத்தில் அவன் தலைக்கு ஒரு கல்லை எடுத்து வைத்து நித்திரை செய்தான்.

அப்பொழுது அவனது சொப்பனத்தில் ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தேவதூதாகள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று, "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர், நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உனக்குள்ளும் உன் சந்ததிகளுக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னை காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்'' என்றார்.

அவன் மிகவும் பயந்து, திகிலுடன் எழுந்து, "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாந்திருந்தேன். இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறில்லை, இது வானத்தின் வாசல்" என்றான். எனவே தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து,அதைத் தூணாக நிறுத்தி அதின் மேல் எண்ணெய்யை வார்த்து அந்த ஸ்தலத்திற்குப் ''பெத்தேல்'' என்று பெயரிட்டான். அதற்கு ''தேவனுடைய வீடு'' என்று அர்த்தமாகும்.

மேலும் அவன் “தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி தம் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார். தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசம பாகம் செலுத்துவேன்” என்று பொருத்தனைப் பண்ணிக்கொண்டான்.

யாக்கோபு, தன் தாயின் சகோதரனான லாபானின் பட்டணத்தை சென்று சேர தொடர்ந்து பல மைல்கள் பயணம் செய்தான். பட்டணத்தை அடைந்த யாக்கோபு தன் மாமனைக் கண்டு அவனுக்கு வேலைகள் செய்ய தொடங்கினான். அப்போது தன் மாமனுக்கு இரண்டு குமாரத்திகள் உண்டு என்பதை யாக்கோபு அறிந்தான். மூத்தவள் லேயாள், இளையவள் ராகேல். இளையவள் மிகவும் அழகானவளாய் இருந்தாள். சில நாட்கள் கடந்தவுடனே, லாபான், யாக்கோபிடம் “நீ என் மருமகனாயிருப்பதினால் சும்மா எனக்கு வேலை செய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய் சொல்! என்று கேட்டான்.

யாக்கோபு ஒரு நொடி யோசித்து, “உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழு வருடம் வேலை செய்கிறேன்” என்றான். உடனே லாபான் அதற்கு சம்மதித்தபடியால் யாக்கோபு லாபானின் ஆடுகளை ஏழு வருஷங்கள் கண்காணித்தான். ராகேலின் மேல் இருந்த பிரியத்தினால் அந்த ஏழு வருஷங்கள் அவனுக்குக் கொஞ்ச நாட்களாக தோன்றினது. அந்த நேரம் முடிந்தவுடன், லாபான் அனேகரை திருமண விருந்துக்கு அழைத்தான். அன்று இரவிலே அனைவரும் குடித்து வெறிந்திருந்த நேரத்தில் லாபான், முக்காடிட்டிருந்த தன் மூத்த மகளாகிய லேயாளை அழைத்துக் கொண்டு போய் யாக்கோபிடம் சேர்த்தான்.

அவளை அவன் சேர்ந்தான். காலையில் எழுந்தவுடன் அவன் தன் பக்கத்தில் ராகேலுக்கு பதிலாக லேயாள் இருந்ததைக் கணடான்.

உடனே “நீர் என்னை ஏமாற்றி விட்டீர்” என்று கத்திக்கொண்டு லாபானை தேடிச் சென்றான். “நான் ராகேலைத்தான் நேசிக்கிறேன்!

அவளுக்காக நான் ஏழு வருஷம் வேலை செய்தேன் என்று உமக்கு தெரிந்திருந்தும் பின் ஏன் இப்படி செய்தீர்?" என்றான்.

உடனே லாபான் "மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல" என்று யாக்கோபை சமாதானப்படுத்தி பின்னர் "இதோ பார்! என்னிடத்தில் ஒரு யோசனை இருக்கிறது. லேயாளுடைய ஏழு நாட்களையும் நிறைவேற்று. ராகேலையும் உனக்கு தருவேன். அவளுக்காகவும் நீ இன்னும் ஏழு வருஷம் என்னிடத்தில் வேலை செய்ய வேண்டும். என்றான்.

யாக்கோபிற்கு வேறு வழி இல்லாதபடியால், அதை ஏற்றுக் கொண்டான். ஏழு நாட்களுக்கு பிறகு தான் நேசித்த ராகேலை திருமணம் செய்தான்.

யாக்கோபு தன் மாமனாகிய லாபானின் ஆடுகளை தன் இரண்டு மனைவிகளுக்காக கண்காணித்தான். ஆனால் அவன் ராகேலை, லேயாளைக் காட்டிலும் அதிகமாக நேசித்தான் என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டால் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். ராகேலோ மலடியாயிருந்தாள்.

லேயாள் நான்கு குமாரர்களைப் பெற்றவுடன், ராகேல் அவள் மீது பொறாமையடைந்து, யாக்கோபை நோக்கி, "எனக்கு பிள்ளை கொடும் இல்லாவிட்டால் நான் சாகிறேன்" என்றாள். அதற்கு யாக்கோபு "தேவனல்லவா உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். நான் தேவனா?" என்று விரக்தியடைந்து பதிலளித்தான்.

ராகேலும், ஈசாக்கின் தாய் சாராள், ஆபிரகாமுக்கு செய்த அதே தவறை செய்தாள். "இதோ,என் வேலைக்காரி பில்காளுடன் சேரும். அவள் எனக்காக பிள்ளைகளைப் பெறுவாள்" என்றாள். அவனும் அவ்வாறே செய்தபடியால், பில்கால் இரு குமாரர்களை பெற்றெடுத்தாள்.

லேயாளோ தனக்கு பிள்ளை பெறுகிறது நின்று போனதைக் கண்டு, தன்னுடைய வேலைக்காரியாகிய சில்பாளை யாக்கோபுக்கு கொடுத்தாள். இரு மனைவிகளிடையே ஏற்பட்ட பொறாமைக்கு

அளவில்லை. இதனால் வெகு சீக்கிரத்தில் யாக்கோபுக்கு 10 குமாரர்களும் 1 குமாரத்தியும் பிறந்தார்கள்.

பின்பு, தேவன் ராகேலை நினைந்தருளி, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். அவள் ஒரு குமாரனை பெறச் செய்தார். அவள் அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள். அவன் யாக்கோபிற்கு மிகவும் பிரியமான குமாரனானான். யாக்கோபு ஊரிலிருக்கும் லாபானிடம் சென்று, "நான் என் வீட்டிற்கு என் மனைவியோடும்,பிள்ளைகளும் போக என்னை அனுப்பிவிடும்" என்றான்.

அதற்கு லாபான் "தயவு செய்து என்னை விட்டு விட்டு போக வேண்டாம். உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசிர்வதித்தார் என்பதை என் தெய்வங்களிடம் குறி கேட்டதினால் அறிந்தேன்" என்றான். யாக்கோபினால்தான் தான் செல்வந்தனானேன் என்பதை லாபான் அறிந்தபடியால் அவன் யாக்கோபையும், அவன் குமாரத்திகளையும், பேரப்பிள்ளைகளையும் இழக்க விரும்பவில்லை. அவன் கண்ணுக்கு அவர்களும், அவன் சொத்தின் ஒரு பகுதியாக காணப்பட்டனர்.

ஆதலால் யாக்கோபு லாபானுக்கு கூடுதலாக 6 வருஷங்களுக்கு அவன் தன் மாமனுக்கு கொண்டு வந்த பெருக்கத்தின் ஒரு பாகத்திற்காக வேலை செய்தான். லாபான், யாக்கோபை வஞ்சித்து அவன் சம்பளத்தைப் பத்து முறை மாற்றினாலும், யாக்கோபின் ஆடுகளின் பெருக்கம் அதிகரித்தது. எனவே அவன் மனைவியின் சகோதரர்கள் "எங்கள் தகப்பனுக்கு உண்டானவைகள் யாவையும் யாக்கோபு எடுத்துக்கொண்டான்" என்றும் பேசிக் கொண்டிருப்பதை கேட்க நேர்ந்தது. அது மட்டும் அல்லாமல் லாபானும் தன்னிடத்தில் நடந்து கொள்கின்ற முறையில் மாறுதலை கண்டான்.

அப்போது கர்த்தர் யாக்கோபை நோக்கி "உன் பிதாக்களுடைய தேசத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப் போ. நான் உன்னோடே கூட இருப்பேன்" என்றார். இதனால் யாக்கோபு தன் மனைவிகளையும்,பிள்ளைகளையும் தன் ஆஸ்திகளையும் ஒன்று சேர்த்து ரகசியமாக லாபானுக்கு தெரிவிக்காமல் தப்பி ஓடினான். தேவன் யாக்கோபை 20 ஆண்டுகளாக செழிக்கச் செய்து

காப்பாற்றினாலும் இனிவரும் நாட்களில் அவன் அதை விட பெரிய சவால்களை சந்திக்க நேரிடும்.

இந்த பாடம் மிகவும் முக்கியமானது. ஏனெனில் தேவன் தம்மைப் பரியாசம் பண்ண வொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் (கலா 6:7) என்ற உண்மையை அறிவிக்கிறது. ஒருவன் பிறரை ஏமாற்றுவானெனில் அவனும் ஏமாற்றப்படுவான். யாக்கோபின் அனுபவமும் அவ்வாறே இருந்தது. பரிசுத்தமான வாழ்க்கையை வாழாமல் தேவனிடத்தில் இருந்து ஆசிர்வாதத்தை எதிர்பார்க்க முடியாது. கர்த்தரோடு தனிப்பட்ட உறவு இருந்தால் மட்டுமே ஆசிர்வாதத்தை பெற இயலும்.

இந்த பாடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் உண்மையென்னவென்றால் தேவன் தம் திட்டத்தை, குறைவுள்ள மனிதர்களை வைத்துக் கூட நிறைவேற்றுவார். அவர் வாக்குத்தத்தங்கள் அவர் அன்பின் நிமித்தமாகவும், வல்லமை நிமித்தமாகவும் மாறுவதில்லை.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் இந்தக் கேள்விகளுக்கு பதில் அளிக்கவும்.

1. யாக்கோபு தன் தாயின் குடும்பத்தினரிடம் தப்பி ஓடும் அளவிற்கு ஏசா என்ன கூறினான்?(6 நொடிகள் நிற்க)

   'என் தந்தை மரித்தவுடன் நான் யாக்கோபைக் கொன்றுவிடுவேன்' என்று ஏசா கூறினான் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. யாக்கோபிடம் அவன் சொப்பனத்தில் யார் பேசினார்? (6 நொடிகள் நிற்க)

   'ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.
3. யாக்கோபு லாபானிடமிருந்து தப்பி ஓடும் பொழுது தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? (6 நொடிகள் நிற்க)

   'தேவன் நான் உன்னோடே கூட இருப்பேன்' என்றுக் கூறினார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்தக் பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடந்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தை நீங்கள் இதை பற்றி அறியாத நபருக்கு கற்றுக் கொடுங்கள். அதன் பின்னர் அவரிடம் நாம் மற்றவரை ஏமாற்றி நம்முடைய வாழ்க்கையில் முன்னேறும் போது தேவன் என்ன செய்வார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? என்று கேளுங்கள்.

காரியங்கள் தவறாக நடக்கும் போது, அவற்றிலிருந்து தப்புவிக்கும்படி நாம் தேவனிடம் கேட்க வேண்டும். நாம் தேவனை விசுவாசித்து நம் பாவங்களை அறிக்கை செய்யும்போது தேவன் நம்மை தப்புவிப்பார்.

பாடம் முடிந்தது